# பொதுக்காலத்தின் இருபத்துநான்காம் ஞாயிறு

# திருவழிபாடு ஆண்டு - B

# 2024-09-15

(*இன்றைய வாசகங்கள்:*

*இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து வாசகம்.* 50:5-9,

*பதிலுரைப்பாடல்: திபா.* 116:1-6,8-9,

*திருத்தூதர் யாக்கோபு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்.* 2:14-18,

*மாற்கு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 8: 27-35)

*திருப்பலி முன்னுரை*

*மீட்புக்குரியவர்களே, பொதுக்காலத்தின் இருபத்துநான்காம் ஞாயிறு திருப்பலியை சிறப்பிக்க உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். இன்றைய திருவழிபாடு நமது சிலுவையை சுமந்து கொண்டு ஆண்டவரைப் பின்பற்ற நமக்கு அழைப்பு விடுக்கிறது. கிறிஸ்தவ வாழ்வென்பது ஒரு சீடருக்குரிய வாழ்வு. அற்புதங்களையும், அதிசயங்களையும் எதிர்பார்க்காமல், இயேசு கிறிஸ்துவின் சிலுவைப் பயணத்தைப் பின்தொடர நாம் அழைக்கப்பட்டுள்ளோம். அரச அதிகாரத்தோடு கூடிய மெசியாவை அல்ல, சிலுவை மரணத்தை ஏற்றுக்கொண்ட கிறிஸ்துவை நாம் பின்பற்ற வேண்டும் என்பதே கடவுளின் திருவுளம் என்பதை நினைவில் கொண்டு வாழ நாம் அழைக்கப்படுகிறோம். இறையாட்சியின் இலட்சியங்களுக்காக நம்மை முழுவதும் இழந்து கடவுளின் அரசை இவ்வுலகில் நிலைநாட்டும் வரம் வேண்டி, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.*

## *விசுவாசிகள் மன்றாட்டுகள்:*

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*மீட்பளிக்கும் இறைவா!*

*திருஅவையின் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர்கள் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் உமது திட்டத்தையும், திருவுளத்தையும் உய்த்துணர்ந்து திருஅவையைத் திறம்பட வழிநடத்த வேண்டிய ஞானத்தைக் கொடுத்தருள வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*நம்பிக்கையின் இறைவா!*

*நாங்கள் கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டு அவரது பணிகளில் உடன் உழைப்பாளராக எங்களையும் இணைத்துக் கொள்ள வேண்டுமென்று மன்றாடுகிறோம்*

*எங்களுக்காக சிலுவையில் அறையுண்ட இயேசுவே!*

*உமது வேதனைகளையும், பாடுகளையும், தியானிக்கும் நாங்கள் எங்களுக்கு அடுத்திருப்பவர்கள் படுகின்ற பாடுகளிலிருந்து அவர்களை விடுவித்து அமைதியான வாழ்வு வாழ வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*அன்பு இறைவா!*

*பொறாமை எண்ணத்தால் நல்ல மனிதர்களை ஒழித்துக் கட்ட வேண்டும் என்ற எண்ணத்திலிருந்து மனமாறி நல்ல எண்ணம் படைத்தவர்களாக வாழ வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*துன்பத்தில் ஆறுதல் தரும் இறைவா!*

*இயேசுவின் அன்பை உணர்ந்த நாங்கள், எங்கள் சொல்லில் மட்டுமல்லாமல் செயலிலும் உமது உண்மையான அன்பை விளங்கச் செய்ய வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*வாழ்வை வழங்குபவராம் இறைவா,*

*உமது மக்களாகவும், உம் திருமகனின் சீடர்களாகவும் வாழ அழைக்கப்பட்டுள்ள கிறிஸ் தவர்கள் அனைவரும், பசி, நோய், துன்பம் போன்றவற்றால் வேனையுறும் மக்களுக்கு பணியாற்றி, புதுவாழ்வு அளிக்க உதவ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

*துன்புற அழைப்பவராம் இறைவா,*

*உம் திருமகன் இயேசுவின் சிலுவைப் பயணத்தைப் பின்பற்றி, இறையாட்சியின் இலட்சியங்களுக்காக தங்களை முழுமையாக அர்ப்பணிக்கும் நல்ல உள்ளத்தை எம் பங்குத்தந்தை, அருட்சகோதரிகள், பங்கு மக்கள் அனைவருக்கும் தந்தருள வேண்டு மென்று உம்மை மன்றாடுகிறோம்.*